**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2016**

---

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக வருமானக்கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் முதன்மையான விடயங்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கங்கள் செய்வதற்கான தேவைப்பாடொன்று இருந்ததா என்பதை தீர்மானிப்பதற்கு எனக்கு முடியாமல் இருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது. அக்காரணத்திற்காக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 1 இல் பந்தி இலக்கம் 21 இன் பிரகாரம் நிதியத்தின் உரிமை / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாததுடன் பின்பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்புக்கள் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 02 இன் பந்தி இலக்கம் 21(அ) பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியம இலக்கம் 7 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கட்டிடம் பொறி மற்றும் உபகரணங்கள் அட்டவணையில் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,480,981 ஆன கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாக வேறாக வெளிக் காட்டப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக ஆரம்ப மீதியுடன் உள்ளடக்கப்பட்டு காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 6,003,155 ஆன பொத்துவில் சுற்றுலா விடுதியின் சட்டரீதியான உரிமை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இருப்பதாக கணக்கீட்டுக் குறிப்புக்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 விசேட செயற்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,222,780 ஆன செலவுகள் நிர்வாகச் செலவுகளாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான 7 செலவுத் தலைப்புக்களுக்காக 2017 ஆம் வருடத்தில் செலுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 327,119,813 ஆன செலவுகள் தொடர்பாகத் தேவையான ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ரூபா 797,868 ஆன கட்டிடம் பொறி மற்றும் உபகரண மீதி வருமானச் செலவுக் கணக்கிற்கு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த வருடத்தின் திசெம்பர் 31 இல் அலுவலக உபகரண தேறிய மீதி ஆரம்ப மீதியாக எடுக்கப்பட்ட போது ரூபா 23,606 ஆனது அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி பயிற்சி மத்திய நிலையத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 2,177,326 ஆன முற்பணம் செலுத்தியமை, முற்பணமாக கணக்கிடப்படாததுடன் அத் தொகை செலவு செய்யப்படாது திசெம்பர் 31 இல் முற்பணத் தீர்ப்பனவுகள் கணக்கிடப்பட்ட போது பணம் பெறப்பட்டமை மட்டும் சரியாக சீராக்கப்பட்டிருந்த போதிலும் முற்பணக் கணக்கிற்கு உரிய தீர்ப்பனவுகள் குறிப்பு திரட்டு நிதித்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டுக் கணக்கு பரிசோதிக்கப்பட்ட போது 12 மாவட்டங்களில் உள்ள பயனாளிகளின் கொடுப்பனவுகள் மற்றும் 11 மாவட்டங்களிலுள்ள பயனாளிகளின் பெறுவனவு கட்டுப்பாட்டு கணக்குகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளுக்கிடையிலான வித்தியாசம் ரூபா 1,202,823 ஆக அவதானிக்கப்பட்டது. மேலும் 02 வகையான செலவுகளில் காசேட்டின் பிரகாரம் மற்றும் வருமான செலவுக் கணக்கின் பிரகாரம் ரூபா 212,884 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

5 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 19,184,984 ஆன கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் அட்டவணைகள் போன்ற கணக்காய்சுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.5 முன்னைய வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு

1997 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிதியத்தின் 1997 ஆம் வருடத்திலிருந்து 2012 ஆம் வருடம் வரையான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படாது , 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நடாத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் நிதியத்தின் 2013, 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களின் கணக்குகளின் கணக்காய்விற்காகத் தனிப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரின் உதவி பெறப்பட்டு ரூபா 11,760,000 செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் தனிப்பட்ட கணக்காய்வாளரினால் 3 வருடங்களுக்கும் அபிப்பிராயம் மறுக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற மேலதிகமாகப் பெறப்பட்ட காப்புறுதி தவணைப் பணம் ரூபா 968,262 ஆனது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 மாவட்டச் செயலகங்களில் 2012 ஆம் வருடத்திலிருந்து 2016 வருடம் வரை காணப்பட்டு வருகின்ற ரூபா 5,163,240 ஆன தீர்க்கப்படாத முற்பண மீதி 2 வருடங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரையான காலத்திற்கு மேற்பட்டதாக இருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 சனவரி மாதம் 26 ஆந் திகதிய 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிக் கோவை. 4.2.1 "அ" மற்றும் "ஆ" வழிகாட்டி | எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாது மீளாய்வாண்டில் ரூபா 201,646,781 ஆன சொத்துக்கள் மற்றும் கட்டிடம். கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தி | நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நிதியம் தொடர்பான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிக்கப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் சரியான தன்மையை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 1,121,745,567 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 450,734,305 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 671,011,262 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. இம்முன்னேற்றத்திற்கு பங்களிப்புப் பணம் பெறுவனவுகள் ரூபா 915,125,650 ஆலும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 302,632,484 ஆலும் உயர்வடைந்தமையே பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 சனவரி 01 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான நம்பிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் சமுர்த்தி பயனாளிகளின் நலன்களின் மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான செலவுகள் மற்றும் வசதிகளை வழங்கும் குறிக்கோள் மற்றும்நோக்கத்துடன் இந் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் நிதியத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கத்திற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 93,741,659 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கேடட் குழுக்களைச் சேர்ந்த குறைந்த வருமானம் மற்றும் சமுர்த்தியாளரின் பிள்ளைகளுக்கு ''ஹர்மன் லொஸ்'' போட்டியில் பங்குபற்றுவதற்காக பொரமடுல்ல மத்திய மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,947,060 ஆன தொகையில் ரூபா 965,461 ஆனது செலவு செய்யப்படாது 9 மாதங்களுக்கும் அதிக காலமாக நடைமுறைக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 221,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2 ரைபிள்கள் பௌதீகப் பரிசோதனைககாகச் சமர்ப்பிக்கப்படாததுடன், பொருட் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் நோக்கத்திற்கு உரியதல்லாத முதியோர் இல்லங்களின் உறுப்பினர்களுக்கு யாத்திரைகளுக்காக 2016 ஆம் ஆண்டில் ஒரு பேரூந்தின் பெறுமதி ரூபா 7,990,000 வீதம் 9 பேரூந்துகளுக்காக ரூபா 71,910,000 செலவிடப்பட்டிருந்ததுடன் அப்பேரூந்துகளை வாங்கிய நிறுவனத்திடம் 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வுத் தேவைகளுக்காக பெறப்பட்ட விலையின் பிரகாரம் பேரூந்து ஒன்றின் பெறுமதி ரூபா 6,500,000 ஆக விலைமனுக் கோரப்பட்டபோது ஒரு பேரூந்திற்காக ரூபா 1,490,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் பேரூந்துகளைப் பரிசோதனை செய்வதற்காக 4 அதிகாரிகள் 03 நாட்களுக்கு இந்திய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்ததுடன் அதற்காக ரூபா 134,075 ஆன அமையக் கொடுப்பனவொன்றும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சிப்தொர புலமைப்பரிசில் திட்டங்களுக்காக 2014/2016 மற்றும் 2015/2017 போன்ற கல்வியாண்டுகளில் புலமைப்பரிசில் விருது வழங்கும் விழாவுக்காக ரூபா 6,728,074 செலவிடப்பட்டு விடயப் பொறுப்பு அமைச்சரின் தலைமையில் விழாவொன்று நடைபெற்ற போதிலும், மேலும் 03 மாவட்டங்களில் விழாக்கள் நடாத்தப்பட்டு புலமைப்பரிசில் உதவுத் தொகைக்காக ரூபா 41,681 உம் ஆக மொத்தம் ரூபா 6,796,755 ஆன விழாச் செலவொன்று செலவிடப்பட்டிருந்தது.

(உ) சமுர்த்தி பெறுநர்களின் குடும்பங்களில் உயர்தரத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு நிதி நிவாரணமொன்று வழங்குவதற்காக புலமைப்பரிசில் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2014/2016 கல்வியாண்டில் உயர் தரத்தில் கல்விகற்கும் 9,687 மாணவர்களுக்காக ரூபா 154,992,000 ஆனது 16 மாதகால தாமதத்துடன் மற்றும் மேலும் 2015/2017 மற்றும் 2016/2018 கல்வியாண்டுகுளுக்காக 19,313 மாணவர்களுக்காக ரூபா 289,709,000 ஆனது 16 மாதங்கள் தொடக்கம் 04 மாதங்கள் காலதாமதத்துடன் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அக்காரணத்தினால் தேவையான காலப்பகுதிக்குள் உரிய பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேர்ந்தெடுக்கப்பட்ட சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 பிள்ளைகளுக்கு சைகை மொழி டிப்ளோமா கற்கைநெறி 2016/2017 இற்காக ரூபா 4,165,000 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. கற்கை நெறிக்கு பங்குபற்றியோர் தொடர்பாக 2021 நவம்பர் 05 ஆந் திகதி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெயர்ப் பட்டியலின் பிரகாரம் 20 மாணவர்கள் கற்கைநெறியை முடிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,666,000 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது.

(எ) நிலாவெளி பயிற்சி மத்திய நிலையம் கொள்வனவு செய்வதற்காக 2016 மே மாதத்தில் கிழக்குப் பிரதேச பிரதான மதிப்பீட்டாளரினால் ரூபா 126 மில்லியன் அண்ணளவாக மதிப்பிடப்பட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2016 செப்டெம்பர் மாதத்தில் பிரதான மதிப்பீட்டாளரினால் ரூபா 113 மில்லியன் மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. விற்பனையாளரால் இம்மதிப்பீட்டறிக்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட

மேன்முறையீடு கவனத்திற் கொள்ளப்பட்டு 2016 செப்டெம்பர் மாதத்தில் இப்பெறுமதி ரூபா 121 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டமையால் மத்திய நிலையத்திற்காக 03 சந்தர்ப்பங்களில் நானாவித மதிப்பீட்டுப் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

**4.2 முதலீட்டு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி மாதத்தில் தேசிய சேமிப்பு வங்கியில் பல வருடங்களாக முதலீடு செய்யப்பட்டிருந்த 6 நிலையான வைப்புக்களில் 5 நிலையான வைப்புக்களுக்கான வட்டி விகிதம் 6.6 சதவீதம் ஆக இருந்ததுடன் ரூபா 500,000,000 ஆன வைப்புக்களுக்காக வட்டி விகிதம் 6.5 சதவீதமாக இருந்த காரணத்தினால் வருடத்திற்காக இழக்கப்பட்ட வட்டி ரூபா 500,000 ஆகும்.

(ஆ) நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யும் போது அரச வங்கிகளில் காணப்படுகின்ற வட்டி விகிதம் தொடர்பான கவனம் கோரப்பட்டு குறிப்பிடப்பட்ட தினத்தில் அதிகபட்ச வட்டி விகிதமொன்று வழங்குகின்ற வங்கியில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 5 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் இழக்கப்பட்ட வட்டி ரூபா 1,165,874 ஆகும்.

(இ) இலங்கை வங்கியில் உள்ள ரூபா 46,119,618 ஆன நிலையான வைப்பு முதலீடொன்று முதிர்வடைந்த பின்னர் 2016 யூலை மாதத்திலிருந்து 06 மாதங்களுக்கு மீள் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அம்முதலீடு முதிர்வடைவதற்கு முன்னர் ஒக்தோபர் மாதத்தில் பெறப்பட்ட காரணத்தினால் சராசரி சேமிப்பு வட்டியொன்றைக் கூட பெற்றுக் கொள்ளவில்லை.

**4.3 மனிதவள முகாமைத்துவம்**

நிதியத்திற்காக கணக்காளர் ஒருவர் நிரந்தரமாக ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையில் 4 சந்தர்ப்பங்களில் பதிற்கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிறுவன அதிகாரிகளின் சேவை பெறப்பட்டிருந்தும் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(இ) பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் , 05 வருட கால தாமதத்தின் பின்னர் 2021 யூலை 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கை தொடர்பாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் யின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டமொன்று மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவி கணக்குப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.